திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அரசாங்க வக்கீல் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சொல்லி சம்பளம் வாங்கலாமா, நாம் கொடுக்கலாமா?

1. தகவல் கோரல் — (தொடர்ச்சி).

(ஆ) உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதம் எனவும், பெண்களுக்கு 15 சதவிகிதம் எனவும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டபடி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற முயற்சி எடுக்கும்போது உச்ச நீதி மன்றத்தில் தடை ஆணை வழங்கப்பட்டது. விதட்ரா செய்யப்பட்டு இருக்கிறது. எனவே இப்போது நடைபெற்றிருக்கின்ற ஊராட்சி, நகராட்சி தேர்தல் பழைய அடிப்படையில் நடைபெற்றிருக்கிறது. புதிய முறைப்படி வழங்கலாம், அது நியாயம் என்று உச்ச நீதிமன்றத்தில் உள்ள தடை ஆணை வாபஸ் பெற பெற்றதால் ஏற்கனவே நடைபெற்றிருக்கின்ற தேர்தல் செல்லுமா? அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பெரிய சட்டப் பிரச்சனை.

2. அறிக்கைகள் அளித்தல் — தொடர்ச்சி).

(ஆ) விதி 111-ன் கீழ் தம் வீட்டில் வருமான வரி அதிகாரிகள் அல்லது சி.பி.ஐ. சோதனை செய்தார்கள் என்ற செய்தியை மறுத்து சட்ட அமைச்சர் விடுத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கே I present a statement under Rule 111 on a of public importance.

நாட்டுடைமையாக்கப்பட்ட ஒரு வங்கியில் வருமானவரி அதிகாரிகள் அல்லது சி.பி.ஐ. சோதனை நடத்தியபோது எனது பெயரிலோ அல்லது என் தொடர்பாகவோ 1½ கோடி ரூபாய்

அந்த வங்கியிலிருந்து கைப்பற்றப்பட்டதாக செய்தி சில ஏடு களில் வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. சி.பி.ஐ. அல்லது வருமானவரி அதிகாரிகள் அல்லது இரண்டும் இணைந்து நடத்திய சோதனையில் என் வீட்டிலிருந்து ரூ 1½ கோடி கைப்பற்றப்பட் டதாகவும் சில மஞ்சள் ஏடுகளில் ஒரு செய்தி வந்துள்ளது. பொது முக்கியத்துவம் வாய்ந்த இது பற்றிய உண்மை நிலை யினை இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

வருமானவரி அதிகாரிகளோ அல்லது சி.பி.ஐ. அதிகாரிகளோ அல்லது இருவரும் இணைந்தோ என்னுடைய இல்லத்திலோ அல்லது எனக்கு தொடர்புடைய வேறு எந்த இடத்திலோ இது காறும் எந்தவித சோதனையோ அல்லது விசாரணையோ எந்தக் காலத்திலும் நடத்தியது கிடையாது. அப்படி சோதனையோ அல்லது விசாரணையோ நடந்ததாக என்மீது அரசியல் காழ்ப் புணர்ச்சியுள்ள சில எதிர்க்கட்சி ஏடுகளில் வந்துள்ள செய்தி முழுக்க முழுக்க உண்மைக்கு மாறானதும், விஷமத்தனமானதும், அரசியல் காழ்ப்புணர்ச்சி உடையதும், வேண்டுமென்றே என்மீது களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற தீய உள்நோக்கோடும் வெளியிடப்பட்டதுமான செய்தியாகும். அப்படி ஒரு சோதனையோ அல்லது விசாரணையோ என்னிடமோ அல்லது என் தொடர்பாகவோ, சி.பி.ஐ.-யாலோ அல்லது வருமானவரி அதிகாரிகளாலோ அல்லது வேறு யாராலோ எந்தக் காலக்கட்டத் திலும் எங்கும் அறவே நடத்தப்படாதபோது, 1½ கோடி. . . (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அது கோர்ட்டிலே இல்லை. சும்மா எவனோ வேலையற்றவன் பண்ணிவிட்டான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் விளக்கம் தருகிறேன். இட் ஈஸ் நாட் பிஃபோர் தி கோர்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பிழைப்பு இல்லாதவன், வேலையே இல்லாதவன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான விளக்கத்தைச் சொல்கிறேன். 1½ கோடி ரூபாய் பணம் என் தொடர்பான சோதனையின் போது

கைப்பற்றப்பட்டது எனும் கூற்று முற்றிலும் கற்பனையானது; முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது; அணுவளவும் ஆதார மற்றது; தீய அரசியல் உள்நோக்கோடு என்மீது களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற சதி நோக்கோடு எனது அரசியல் எதிரிகளால் புனையப்பட்டது.

இத்தகைய தீய அரசியல் உள்நோக்கோடு, எனக்கு எதிராக, முற்றிலும் உண்மையற்ற, விஷமத்தனமான இச்செய்தியினை வெளியிட்டவர்கள் மீதும், வெளியிடக் காரணமாக இருந்தவர்கள் மீதும் தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவையின் மூலமாக மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள் கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, This is not a matter which is sub judice, because the Writ Petition is not yet admitted. Only when he Writ Petition is admitted the matter becomes sub judice. Hon. Member Thiru Rahmankhan is an Advocate. Ke knows the position.

3. கவன ஈர்ப்பு.

(அ) திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் வறட்சி நிலை.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருமங்கலம் மற்றும் உசிலம் பட்டி வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS